1981 ஏப்ரல் 27]

முன்னறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன் மீது பொதுமக்களிடமிருந்து வந்துள்ள ஆலோசனைகளையும் எதிர்க் கருத்துக்களையும் அரசு ஆய்ந்து ஊதிய முன் அறிவிக்கையை உறுதி செய்வது பற்றி விரைவில் ஆணை பிறப்பிக்கும். அதன்பின் மேற்கூறிய "ஃபால் பேக் வேஜஸ்" (Fall back wages) முறை பற்றிய முடிவு அமுலுக்கு வரும்.

கடைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம்.

*வினா எண் 898.—**திரு. கு. ரமணி**: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள கடைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டு 2—10—80 தேதி முதல் அமுலுக்கு வருவதாய் அரசு பிரகடனப்படுத்தியபடி சம்பள விகிதங்கள் அமுலாக்கப்படுகிறதா?

(ஆ) அதை மாற்றியமைக்கும்படி கோரி வியாபாரிகளால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதா?

(இ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) ஆம்.

(இ) வியாபாரிகளிடமிருந்து பெறப்பட்ட எதிர்க் கருத்துக்கள் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயித்து அதைக் கொடுப்பதற்கு தவிர்க்கக்கூடிய முறையில் சில தொழிலதிபர்கள் உயர்நீதிமன்றங்களுக்குச் சென்று அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய தந்திரத்தை கையாளுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஷாப் அண்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்ட்' கடைகள், நிறுவனங்களில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு முதன்முறையாக இந்த அரசுதான் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்திருக்கிறது. அது அனைவரும் பாராட்டக்கூடியதாக அமைந்திருக்கிறது. பாராட்டியும் இருக்கிறார்கள். மாண்புமிகு ரமணி அவர்களும் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன். ஆனால் சில முதலாளிகள் வழக்கு மன்றங்களுக்குச் சென்றிருக்கி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

றார்கள். வழக்கு மன்றங்களுக்குச் செல்வதைத் தடை செய்ய முடியுமா என்பதை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைத்தான் கேட்க வேண்டும். கேட்டுப் பார்க்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கடை ஊழியர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்ததை நிச்சயமாக நான் வரவேற்கிறேன். அதிலே சந்தேகம் இல்லை. அதை அமல்படுத்துவதிலேதான் தடையிருக்கிறது. அந்தத் தடையை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா? உதாரணமாக விவசாய சீர்திருத்தச் சட்டங்களைப்பற்றி கேள்வி கேட்கக்கூடாது; வழக்கு போடக் கூடாது என்று அரசியல் சட்டத்திலே உள்ளது. அதுபோல் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் ஊதியம் நிர்ணயித்திருப்பதை, கோர்ட்டுக்குப் போய் தடுப்பதை, ஊழியர்களுக்கு கஷ்டம் உண்டாக்குவதை தவிர்க்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களைக் கலந்தாலோசித்து எந்தக் காலத்தில் அந்தச் சட்டம் கொண்டு வருவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊதியத்தை கட்டாயமாக அமல்படுத்த வேண்டுமென்று இந்த ஆட்சிக்கு அக்கறை இருக்கிறது. யாராவது தவறு செய்வார்களானால் கட்டாயமாக அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். வழக்கு மன்றங்களுக்கு எந்தெந்த தொழிலதிபர்கள் சென்றிருக்கிறார்களோ அவர்களைத்தான் இது கட்டுப்படுத்தும். இப்போது இங்கே ஆய்வுக்கு வரவிருக்கிற சட்டம் குறைந்தபட்ச ஊதியத்தைப் பொறுத்ததாகும். ஆய்வில் இதைப்பற்றி பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன் கருத்தை தெளிவாகச் சொன்னால் அவைகளைப் பற்றி ஆலோசனை செய்ய, மேலும் 'நாட் ஜஸ்டிசையபில்' ஆக கோர்ட்டுக்கு போகக்கூடாது என்ற முறையில், சட்டத் துறையோடு ஆலோசித்து ஆவன செய்ய இந்த அரசு முயற்சி செய்யும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் சுண்டல், கடலை, முறுக்கு, போன்றவைகள் விற்கிற கடைகள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். அந்தக் கடைகளில் ஆயிரத்திற்கு மேற்பட்ட இராமநாதபுரத்தை சேர்ந்த பையன்கள் வேலை பார்க்கிறார்கள். குறிப்பிட்ட அளவு விற்பனை செய்தால்தான் அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கும். சாப்பாடு கிடைக்கும். அப்படிப்பட்டவர்கள் கடற்கரையில் கூட வருகிறவர்களுக்கு இடைஞ்சலாக விற்பனை செய்வார்கள். அப்படிப் பட்டவர்களுக்கும் கூலி நிர்ணயம் செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, சுண்டல், முறுக்கு என்று சொல்வதில்லை. தேங்காய், மாங்காய், பட்டாணி சுண்டல் என்று சொல்வதுதான் வழக்கம். கடற்கரையில் வியாபாரம் செய்கிறார்கள். 'அன்-ஆர்கனைஸ்டு லேபரர்ஸ்'. ஆர்கனிசேஷனில் வராத தொழிலாளர் களுக்கு சட்டம் கொண்டு வருவதாக இந்த அரசு இருக்கிறது. அதில் இவர்கள் வருவார்களா என்பது பரிசீலனை செய்யப்படும்.

(முற்பகல் 9-40)

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே லட்சக்கணக்கான கடைகளிலே பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதுபோல் குறைந்தபட்ச சம்பளம் பெறமுடியாமல் வேலை செய்கிறார்கள். லேபர் இன்ஸ்பெக்டர்கள் வருகிற நேரத்திலே அந்தத் தொழிலாளர்களை வெளியே அனுப்பிவிடுகிறார்கள். சில விவரம் தெரிந்தவர்கள் —நான் எல்லோரையும் சொல்லவில்லை—சில லேபர் இன்ஸ்பெக்டர்களுக்கு அல்வா, சொச்சி வாங்கிக் கொடுத்து தன்னைக் கட்டி விடுகிறார்கள். இதை யெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு எல்லாக் கடைகளிலும் உள்ள தொழிலாளர் களைப் பதிவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த பட்ச ஊதியம் என்பது 2—10—1980 முதல் அமலுக்கு வந்திருக்கிறது. அதை உன்னிப்பாக அரசு கவனித்துக் கொண்டு வருகிறது. அல்வா, சொச்சி வாங்கிக் கொடுப்பதற்கு சிலர் முயற்சி செய்யும் அந்த அதிகாரிகள் அதை வாங்காமல் நேர்மையாக நாணயமாகப் பணியாற்றி யிருக்கிறார்கள் என்றுதான் எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா 899 உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகிறது.

கிராமப்புற கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள்.

* 900 வினா.—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களை ஒவ்வொரு வட்டத்திலும் அமைப்பது என்ற அரசின் திட்டத்தை நிறைவேற்ற எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

(ஆ) குளித்தலை வட்டத்திற்கு தனியாக சங்கம் அமைக்கக் கோரி முறையீடு வந்துள்ளதா ?

(இ) இது எப்பொழுது அமைக்கப்படும் ?